

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீவாதி பீகர மஹாகுரவே நம:

**ஸ்ரீ செங்கமலவல்லித்தாயார் ஸமேத**
**ஸ்ரீ பள்ளிக்கொண்ட ரெங்கநாதப்பெருமாள் திருக்கோயில்,**
**திருத்தெற்றியம்பலம் திவ்யதேசம், திருநாங்கூர்**
(இந்த திவ்யதேசம் சீர்காழி - கீழமூவர்கரை பஸ் மார்கத்தில் உள்ளது)

# ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மஹாஸம்ப்ரோஷணப் பத்திரிகை

## ஶோபக்ருது வருஷம், மாசி மாதம் 9 - ஆம் தேதி
## 21.02.2024 புதன்கிழமை | காலை 11.15 மணிக்கு மேல் 11.55க்குள்




"தான் போலு மென்றெழுந்தான் தரணியாளன்
அது கண்டு தரித்திருப்பா னரக்கர் தங்கள்
கோன் போலு மென்றெழுந்தான் குன்ற மன்ன
இருபதுதோ ளுடன்துணித்த வொருவன் கண்டீர்
மான்போலு மென்நோக்கின் செய்யவாயார்
மரகதம் போல் மடக்கிளியைக் கைமேல் கொண்டு
தேன்போலு மென்மழலை பயிற்று நாங்கூர்
திருத்தெற்றி யம்பலத்தென் செங்கண் மாலே"

ஸ்ரீய: பதியாய், அவாப்த ஸமஸ்தகாமனாய், ஸ்ரீ வைகுண்ட நிகேதனாய், ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனாயிருக்கிற ஸர்வேஸ்வரன் ஸம்ஸாரி சேதனோஜ் ஜீவனார்த்தமாக பின்னானார் வணங்கும் ஜோதியாய், எய்துமவர்க்கு இந்நிலத்தில் அர்ச்சாவதாரம் எளிது என்றபடி, எக்காலத்திலும், எத்தேசங்களிலும், எல்லார்க்கும், ஆஸ்ரயண சுலபமாம்படியான அர்ச்சாவதாரமாகி பலபதிகளில் எழுந்தருளி நித்யவாஸம் செய்து அனைவரையும் வாழ்வித்தருளுகிறான்.

அப்பதிகளுள், யாவரும் வந்து அடிவணங்கும்படி கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான 108 திவ்ய தேசங்களில் கோயில்கொண்டு ஸர்வ சுலபனாக எழுந்தருளியிருக்கிறான். சோழமண்டல மண்டனமாய், தென்திசைக்கு திலதமன்ன மறையோர் நாங்கை **'சிலம்பியநற் பெருஞ்செல்வம் திகழுநாங்கூர்' 'சீரணிந்த மணிமாடம் திகழு நாங்கூர்', 'மன்னு புகழ் வேதியர்கள் மலிவெய்து நாங்கூர்', 'மண்ணுளார் புகழ்வேதியர் நாங்கூர்',** என்னும் சிறப்புடைய திருநாங்கூர் திவ்யதேசத்தில் **'திருத்தெற்றியம்பலம்'** அவன் இனிது விரும்பி வர்த்திக்கும்படியான திவ்யதேசமாகும்.

விபவத்தில் எழுந்தருளியுது போலே அர்ச்சையிலும் திருமங்கை மன்னன் ப்ரதிவருஷம் மங்களாஸாஸனம் செய்யும் ஏற்றம் பெற்ற பதினோரு திவ்யதேசங்களுள் இத்திவ்யதேசம் **'சிலம்பினிடைச் சிறுபரல் போல் பெரியமேரு'** என்ற இத்திவ்யதேச மங்களாஸாஸன பாசுரப்படி எம்பெருமான் வராஹ அவதாரத்தை எடுத்து ஹிரண்யாக்ஷனை வதம் செய்ய சென்றபோது எம்பெருமானின் பிரிவாற்றாமையினால் ஸ்ரீ லக்ஷ்மிதேவியும் ஸ்ரீ ஆதிசேஷனும் தவம் செய்ய, எம்பெருமான் அருளால் அவர்களுக்கு சேவைஸாதித்து ஸ்ரீதேவி பூதேவியுடன் ஆதிசேஷன் மேல் பள்ளிக்கொண்டு நம் அனைவருக்கும் ஸேவை ஸாதித்துக் கொண்டிருக்கும் புராண சிறப்புடையது.

இவ்வாறு பெருமை பெற்ற இத்திவ்யதேசத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும், **ஸ்ரீ செங்கமலவல்லி ஸமேத ஸ்ரீ பள்ளிகொண்ட ரெங்கநாதப்பெருமாள்** சன்னிதி விமான மண்டப ப்ரகாரங்கள், திருமதில்கள் முதலான அனைத்து திருப்பணி கைங்கர்யங்களும் **மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி** அவர்களின் பரிபூரண அருளாசிகளின் படி **ஜெய ஹனுமான் சேவா டிரஸ்ட்,** சென்னை அவர்களின் முழு பங்களிப்புடன் பூர்த்தி செய்யப்பட்டு நாளது **ஸோபக்ருது வருஷம் மாசி மாதம் 9 - ஆம் தேதி 21.02.2024 புதன்கிழமை ரிஷப லக்னம் புனர்பூசம் நட்சத்திரத்தில், த்வாதசி திதியும், சித்த யோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 11.15 மணிக்கு மேல் 11.55 மணிக்குள் மஹாஸம்ப்ரோக்ஷனம்** நடைபெற இருப்பதால் ஆஸ்திக மஹாஜனங்கள் அனைவரும் பங்குகொண்டு மஹாஸம்ப்ரோக்ஷணத்தை பூர்த்தி செய்து திருத்தெற்றியம்பலத்து செங்கண்மாலின் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரர்களாக நீங்காத செல்வம் நிறைந்து இருக்க ப்ராத்தனை செய்கின்றேம் /கேட்டுக்கொள்கிறேம்.

# நிகழ்ச்சி நிரல்

| தேதி/நாள் கிழமை | காலை | மாலை |
|---|---|---|
| **மாசி – 5, 17-02-2024**<br>**சனிக்கிழமை** | | நித்ய ஆராதனம், பகவத் அனுக்ஞை, பாகவத அனுக்ஞை, விஸ்வக்சேன ஆராதனம், புண்யாவாசனம், மிருத்சங்கிரஹணம், அங்குரார்ப்பணம், சதுர்வேத, இதிஹாச, புராண, திராவிட வேத பாராயணங்கள் தொடக்கம், சோமயாகம், வாஸ்து ஆவாஹணாதி, வாஸ்து சாந்தி ஹோமம், அஷ்டதிக் பந்தனம், சாற்றுமறை, தீர்த்த பிரசாத விநியோகங்கள். |
| **மாசி – 6, 18-02-2024**<br>**ஞாயிற்றுக்கிழமை** | நித்ய ஆராதனம், பூதசுத்தி, புண்யாவாசனம், ரக்ஷாபந்தனம், தீர்த்த சங்கிரமணம், சக்தியாகர்ஷணம், யாசாலை பிரவேசம், துவார, தோரண, த்வஜ, கும்ப பூஜைகள், மண்ட, கும்ப, பிம்ப, அக்னி சதுஸ்தான பூஜைகள் மந்திரபுஷ்பம், தளிகை அமுது செய்வித்தல் ஹோமக்கிரியைகள் மற்றும் சதுர்வேத, இதிஹாச புராண, திராவிட வேத பாராயணங்கள், ஹோமாதிகள் முடிந்து 1-ஆம் கால பூர்ணாஹுதி, தளிகை அமுது செய்வித்தல், அபராதக்ஷமாபணம், சாற்றுமுறை, தீர்த்த பிரசாத விநியோகம் | மாலை 4.00 மணியளவில் உற்சவமூர்த்திகள் சதகலச திருமஞ்சனம் கண்டருளல், பிறகு 2-ஆம் கால துவார, தோரண, த்வஜ, கும்ப பூஜைகள், மண்டல-கும்ப-பிம்ப-அக்னி-ச துஸ்தான பூஜைகள், உபசாராதிகள், மந்திரபுஷ்பம், தளிகை, அமுது செய்வித்தல், ஹோமக்கிரியைகள், சதுர்வேத, இதிஹாச புராண, திராவிட வேத பாராயணங்கள், ஹோமாதிகள் முடிந்து 2-ஆம் கால பூர்ணாஹுதி, தளிகை அமுது செய்வித்தல், அபராதக்ஷமாபணம், சாற்றுமுறை, தீர்த்த பிரசாத விநியோகம் |
| **மாசி – 7, 19-02-2024**<br>**திங்கட்கிழமை** | நித்ய ஆராதனம், பூதசுத்தி, துவார - தோரண த்வஜ - கும்ப - பூஜைகள், மண்டல – கும்ப – பிம்ப - அக்னி சதுஸ்தான பூஜைகள் உபசாராதிகள், மந்திரபுஷ்பம் தளிகை அமுது செய்வித்தல், ஹோமக்கிரியைகள் மற்றும் சதுர்வேத – இதிஹாச - புராண, திராவிட வேத பாராயணங்கள், ஹோமாதிகள் முடிந்து 3-ஆம் கால பூர்ணாஹுதி, தளிகை அமுது செய்வித்தல், அபராதக்ஷமாபணம், சாற்றுமுறை, தீர்த்த பிரசாத விநியோகம் | 4 – மணியளவில் மூலவர் ஸ்ரீ ரெங்கநாத பெருமாளுக்கு சதகலச ஸ்நபன புரோக்ஷண திருமஞ்சனம் (ஏகாந்தமாக) ஸ்ரீ செங்கமலவல்லி தாயார், கருடன், ஆழ்வார்கள், விமான கலசங்கள் தலானவர்களுக்கும், திருமஞ்சனாங்கள்,<br>6 – மணியளவில் துவார – தோரண – த்வஜ – கும்ப பூஜைகள், மண்டல கும்ப – பிம்ப – அக்னி சதுஸ்தான பூஜைகள் உபசாரங்கள், மந்திரபுஷ்பம், தளிகை அமுது செய்வித்தல், ஹோமக்கிரியைகள் மற்றும் சதுர்வேத – இதிஹாச புராண – திராவிட வேத பாராயணங்கள், ஹோமங்கள் முடிந்து 4-ஆம் கால பூர்ணாஹுதி, தளிகை அமுது செய்வித்தல், அபராதக்ஷமாபணம், சாற்றுமுறை, தீர்த்த பிரசாத விநியோகம் |

| தேதி/நாள் கிழமை | காலை | மாலை |
|---|---|---|
| **மாசி – 8, 20-02-2024**<br>**செவ்வாய்க் கிழமை** | **நித்ய ஆராதனம், பூதசுத்தி, துவார – தோரண – த்வஜ – கும்ப – பூஜைகள், மண்டல – கும்ப – பிம்ப – அக்னி சதுஸ்தான பூஜைகள், உபசாரங்கள் மந்திர புஷ்பம், தளிகை அமுது செய்வித்தல் ஹோமக்கிரியைகள் மற்றும் சதுர்வேத இதிஹாச – புராண – திராவிடவேத பாராயணங்கள், ஹோமாதிகள் முடிந்து 5- ஆம் கால பூர்ணாஹுதி, தளிகை அமுது செய்வித்தல், அபராதக்ஷமாபணம், சாற்றுமுறை, தீர்த்த பிரசாத விநியோகம்** | **பிம்ப – அக்னி சதுஸ்தான பூஜைகள், உபசாராதிகள், மந்திரபுஷ்பம், தளிகை அமுது செய்வித்தல், ஹோமக்கிரியைகள் மற்றும் சதுர்வேத – இதிஹாச – புராண – திராவிட வேத பாராயணங்கள், ஹோமாதிகள் முடிந்து 6-ஆம் கால பூர்ணாஹுதி, தளிகை அமுது செய்வித்தல், அபராதக்ஷமாபணம், சாற்றுமுறை, தீர்த்த பிரசாத விநியோகம், தத்வன்யாச ஹோமங்கள் சயனாதிவாசம்.** |
| **மாசி – 9, 21-02-2024**<br>**புதன்கிழமை** | **விஸ்வரூபம் நித்ய ஆராதனம், பூதசுத்தி, த்வார - தோரண – த்வஜ – கும்ப – பூஜைகள், மண்டல – கும்ப – பிம்ப – அக்னி – சதுஸ்தான பூஜைகள், உபசாரங்கள் மந்திர புஷ்பம், தளிகை அமுது செய்வித்தல் ஹோமக்கிரியைகள் மற்றும் சதுவேத இதிஹாச - புராண - திராவிட வேத பாராயணங்கள், ஹோமங்கள் முடிந்து 7 – ஆம் கால மஹா பூர்ணாஹுதி தளிகை அமுது செய்வித்தல், யாத்திராதானம், கிரஹப்ரீதி, துவாராதி, கும்ப பர்யந்தம் உத்வாசனம் காலை 11.00 மணிக்கு கும்ப கலசங்கள் பெருமாளுடன் புறப்பாடு, 11.15 மணிக்கு, ஸ்ரீபெருமாள், தாயார், கருடன் விமானங்களுக்கு மஹாஸம்ப்ரோக்ஷணம் முடிந்து 11.25 மணிக்கு மேல் 11.35 மணிக்குள் மூலவர் மூர்த்திகள் அனைவருக்கும் மஹாஸம்ப்ரோக்ஷணம் தளிகை அமுது, அபராதக்ஷமம், ஸ்வஸ்தி வாசனம், சதுர்வேத – இதிஹாச புராண, திராவிட வேத (நாலாயிர திவ்ய பிரபந்தம்) சாற்றுமுறை தீர்த்த கோஷ்டி, பிரசாத விநியோகம் தீர்த்தாசார்யர் மரியாதை, பொது ஜனசேவை.** | **6 மணியளவில் நித்ய ஆராதனம், தொடர்ந்து ஸ்ரீ பெரியதிருவடி (கருட) வாகனத்தில் திருவீதி புறப்பாடு. கைத்தல சேவை.** |

ஸ்ரீமந் நாக புரீசாய ஸ்ரீஸாய நாக ஸாயினே
லக்ஷ்மி ரங்கநிவாஸாய ரக்தன நேத்ராய மங்களம்.

இப்படிக்கு

திருநாங்கூர் திவ்ய தேச
அனைத்து கைங்கர்யத்திலும்
என்றென்றும் உறுதுணையாக.

**மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி**யின் **ஸ்ரீமதி ஜெயந்தி ஜானகிராமன் நினைவு த்ராவிட வேத ஆகம பாடசாலை,** திருநாங்கூர்.

**பரம்பரை தர்மகர்த்தாக்கள்**
**ப்ரதிவாதி பயங்கரம் P. B. R. ரங்கநாதன்**
**ப்ரதிவாதி பயங்கரம் P. B. R. கண்ணன்**
**ப்ரதிவாதி பயங்கரம் P. T. S. புருஷோத்தமன்**
**ப்ரதிவாதி பயங்கரம் P. B. R. சீனிவாசன்**
**ப்ரதிவாதி பயங்கரம் P. T. R. சீனிவாசன்**
**ப்ரதிவாதி பயங்கரம் P. B. A. கிருஷ்ணமாச்சாரி**

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

சுபம்!